M.M.F. பர்லிஹா – அல் அகீல் மு.ம.வி.

## தாவடி மு. துரைசாமி

- இவர் ஐரோப்பிய யதார்த்தவாதத்தையும் கீழைத்தேச ஓவியப்பாணி முறையையும் இணைத்து ஓவியங்களை வரைந்த ஓர் இந்து ஓவியராவார்.
- இவரது கோவில்சார் ஓவியங்களுள் தாவடி முருகமூர்த்தி கோவிலில் உள்ள பாற்காவடிக்காரன், வள்ளியை ஈன்ற மான், வசிட்டரும் காராம் பசுவும், முருகன் கீழ்ப்பிராமண வேடத்தில் தோன்றி வள்ளியை யானையிடமிருந்து காத்தல், வேடர்கள் என்பன குறிப்பிடத்தக்கவை.
- இவரது ஓவியங்கள் யாழ்பாணக்கிட்டங்கி, காங்கேசன் துறைக் கிட்டங்கி மற்றும் பல தனியார் வீடுகளிலும் காணப்படுகின்றன.
- இவரால் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலில் வரையப்பட்ட வெள்ளைக்கை ஐயரும் விநாயகரும், கூவும் வெள்ளைச் சேவல் என்பன சிறப்பானவை.
- இவற்றுள் கூவும் வெள்ளைச் சேவல் ஓவியத்தில் இளங்கபில நிறச்சாயலைப் பயன்படுத்தியுள்ளார்.
- உலர்சாந்து நுட்பமுறையில் வரையப்பட்ட இவ்வோவியம் முருகன் ஓவியத்தின் ஒரு பகுதியாகும்.
- வெள்ளைக்கை ஐயரும் விநாயகரும் எனும் ஓவியம் இரேகைக்கு முக்கியத்துவம் கொடுத்தே வரையப்பட்டுள்ளது.
- விநாயகருக்குப் பூஜை செய்வது போன்று கபில நிறச் சாயலில் வரையப்பட்டுள்ளது.
- இவ்வோவியத்தின் கலைஞர் ஐயரை விநாயகும் பார்க்க சிறிதாகக் காட்டியுள்ளார்.

- இவ்வோவியம் இயற்கை வர்ணங்களைக் கொண்டு சுண்ணாம்புக் காரையின் மீது வரையப்பட்டுள்ளது.
- **மதிப்பீடு**
- **கீழே தரப்பட்டுள்ள ஆக்கங்களை இனங்கண்டு விடை எழுதுக.**
- 
- **1_இனங்காணல் :..............................**
- **2_பாணி :...............................................**
- **3_நிறப்பயன்பாடு :.............................**
- **4_வரையப்பட்டுள்ள இடம் :.............................**
- **5_நுட்பமுறை :......................................**
- 
- **1_கலைஞன் :.....................................**
- **2_கருப்பொருள் :.................................**
- **3_நிறப்பயன்பாடு :.............................**
- **4_பாணி :...............................................**
- **5_ஊடகம் :.............................................**